2022 ஏப்ரல் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

தமிழ்நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்த உணர்வாக இருக்கக்கூடிய நீட் விலக்கு சட்டமுன்வடிவை குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதுதான் முக்கியம். அதற்காகத்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது. எனவே, தனிப்பட்ட ஒரு நபருக்கான மரியாதைகள், புகழுரைகள் இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு, தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி தொடர்ந்து நான் முயற்சித்துக் கொண்டேயிருப்பேன்.

தமிழ்நாடு முதலமைச்சராக இந்தச் சட்டமன்றத்தின், நூற்றாண்டு கண்ட சட்டமன்றத்தின் மாண்பைக் காக்கும் பொறுப்பும் என்னுடையது என்று புரிந்து கொண்டதால்தான் இந்த முடிவை எடுக்க நேரிட்டது. தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளைத் தொடர்ந்து நாம் அனைத்து மன்றங்களிலும் எதிரொலிப்போம்; அவர்களது உரிமையை நிலைநாட்டுவோம்.

ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பிய மசோதாவை, இந்தச் சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் 8-2-2022 அன்று நிறைவேற்றி, மீண்டும் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு நாம் அனுப்பி வைத்தோம். இன்றுடன் 70 நாட்கள் ஆகின்றன. இந்நிலையில், நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்க மாண்புமிகு ஆளுநர் அவர்கள் முடிவு செய்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அது தொடர்பான நடவடிக்கைகளைப் பார்த்துவிட்டு, தேவைப்பட்டால், அனைத்துச் சட்டமன்றக் கட்சிகளின் கூட்டத்தைக்கூட்டி, அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) முல்லைப் பெரியாறு அணையில் 152 அடிவரை நீரைத் தேக்குதல், அணை பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வருதல் மற்றும் கண்காணிப்புக் குழுவின் செயல்பாடுகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முல்லை-பெரியாறு அணை பிரச்சினை குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள், மாண்புமிகு

[பேரவைத் தலைவர்] [2022 ஏப்ரல் 18

உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள் ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலாவதாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள். பேச வருகின்றவர்கள் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணை, மனிதருள் புனிதராக தென் மாவட்ட மக்களால் போற்றி வணங்கப்படுகின்ற கர்னல் பென்னிகுவிக் என்ற இங்கிலாந்து பொறியாளர் அவர்களுக்கு, பல்வேறு இடையூறுகள் அந்த அணை கட்டும்போது ஏற்பட்டிருந்தாலும், இங்கிலாந்தில் தனது சொத்தை விற்று இங்கு வந்து அந்த அணையைக் கட்டி முடித்தார். 1886-ல், திருவாங்கூர் மகாராஜா அவர்களுக்கும், சென்னை மாகாணத்திற்கும் இடையே முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்ப்பாசனம் தமிழகத்திற்கு 1000 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும் என்கின்ற ஒப்பந்தம் போடப்பட்டது. இன்றுவரை 136 ஆண்டுகள்தான் முடிந்திருக்கின்றன. இன்னும் 865 ஆண்டுகள் இருக்கின்ற நிலையில்,

2022 ஏப்ரல் 18] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அதனுடைய பராமரிப்பை பலப்படுத்தும் பணியை 1979-ல் திருவனந்தபுரத்தில் நடந்த இரு மாநில அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைமூலம் தமிழ்நாடு அரசு செய்ய வேண்டும் என்று கேரள அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, தமிழ்நாடு அரசும் பல கோடி ரூபாய்களைச் செலவழித்து அந்தப் பராமரிப்புப் பணிகளை நிறைவாகச் செய்து முடித்தது. அதனுடைய தொடர்ச்சியாக மத்திய நீர்வளக் குழுமம், 1980 ஆம் ஆண்டு முல்லைப் பெரியாறு அணையினுடைய பாதுகாப்பினை உறுதி செய்ததற்குப் பின்னால், அதனுடைய நீர்மட்டத்தை பராமரிப்புப் பணிகளுக்காகக் குறைக்கப்பட்ட 136 அடியிலிருந்து 145 அடியாக நீரின் அளவினை தேக்கிக்கொள்ளலாம் என்ற உத்தரவினைத் தந்தது. ஆனால், கேரள அரசு அதனுடைய முழுக் கொள்ளளவான 152 அடியிலிருந்து, குறைக்கப்பட்ட அளவான 136 அடியில்தான் இருக்கும் என்ற நிலையில் இருந்துகொண்டு, நீர்மட்டத்தை மத்திய நீர்வளக் குழுமம் பணித்தபோதும், அதனை உயர்த்துவதற்கு மறுத்தது. 1996-லிருந்து 2001 வரை பல்வேறு காலகட்டங்களைக் கடந்து, இரு மாநில முதலமைச்சர்கள், அதிகாரிகள், மாநில அமைச்சர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டும், எந்த முடிவும் ஏற்கப்படவில்லை. இந்தப் பிரச்சினை உச்ச நீதிமன்றம் சென்றது. இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த நேரத்தில், சிறந்த வழக்கறிஞர்களை, மூத்த வழக்கறிஞர்களைக் கொண்டு வாதாடியதன் காரணமாக உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்குமீதான விசாரணை முடிக்கப்பட்டு, 27-2-2006 இல் உச்ச நீதிமன்றம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கியது. அந்தத் தீர்ப்பின்படி குறைக்கப்பட்ட அளவான 136 அடியிலிருந்து 142 அடியாக, முதல்கட்டமாக, நீரைத் தேக்கிக்கொள்ளலாம் என்றும், Baby அணை, சிற்றணை என்று இரண்டு மண் அணைகள் இருக்கின்றன. அந்த இரண்டு அணைகளும் பலப்படுத்தப்பட்ட பின்பு, அணையினுடைய முழுக் கொள்ளளவான 152 அடி வரை நீரைத் தேக்கிக்கொள்ளலாம் என்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்தான் பெற்றுத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே கேரள அரசு நீர்ப் பாசனம் மற்றும் நீர் வளச் சட்டம் ஒன்றை 2003 ஆம் ஆண்டு இயற்றியிருந்தார்கள். அந்த 2003 ஆம் ஆண்டு சட்டத்திற்கு உடனடியாக கேரள அரசு ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவருகிறார்கள். அந்தச் சட்டத் திருத்தம்மூலம் கேரளாவில் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் உள்ள

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2022 ஏப்ரல் 18

அணைகளின் நீர்மட்டங்களை வரையறுக்கின்றார்கள். அவ்வாறு வரையறுக்கின்றபோது முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்மட்டம் 136 அடிதான் என்று அந்த அளவையும் வரையறுக்கிறார்கள். உடனே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றம் சென்று, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்கு மாறாக கேரள சட்டமன்றம் ஒரு சட்டத் திருத்தத்தினைக் கொண்டு வந்திருக்கின்றது. இது இந்திய அரசியல் சட்டத்தின்படி நியாயமாக இல்லை என்ற வாதத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்லி வழக்கு தொடுத்தார்கள். அந்த வழக்கு உடனடியாக 18–3–2006 இல் போடப்பட்டது. 31–3–2006 வரை அந்த வழக்கு நீடித்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. 2006 இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. 2006–லிருந்து 2011 வரை இந்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஏதாவது சொன்னால் அண்ணன் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் எழுந்து பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படும். அதை நான் தவிர்க்கிறேன்.

இரு மாநில முதலமைச்சர்களும்—அப்போது கலைஞர் அவர்கள்தான் முதலமைச்சராக இருந்தார்—அவரும் கேரள முதலமைச்சரும் இரண்டு முறை பேசினார்கள். இரு மாநில அமைச்சர்களும் பேசினார்கள். முடிவு எட்டப்படவில்லை. மீண்டும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு தமிழகத்தினுடைய முதலமைச்சராக ஆட்சிப்பொறுப்பேற்று, இந்த வழக்கை மீண்டும் துரிதப்படுத்தினார்கள். அவ்வாறு துரிதப்படுத்தியதன் காரணமாக 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த வழக்கை விசாரித்தது.

முற்பகல் 11–20

இந்த 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு, திரு. ஆனந்த் என்ற நீதியரசரைத் தலைவராகக் கொண்டு அதிகாரம் படைத்த ஒரு குழுவை நியமித்து, அந்த அணையின் உறுதித்தன்மையை ஆராயச் சொன்னார்கள். கேரள அரசு, அந்த நேரத்தில், அந்தப் பகுதியில் நில நடுக்கம் ஏற்படப்போகின்ற அபாய சூழ்நிலை இருக்கின்றது என்ற ஒரு சந்தேகத்தையும் கிளப்பியது. இந்த அதிகாரம் படைத்த குழு, அனைத்து தொழில்நுட்ப வல்லுநர்களையும் கொண்டு, இந்த அணை எவ்வாறெல்லாம் உறுதியாக இருக்கின்றது, எந்தளவு உறுதித் தன்மையோடு இருக்கின்றது, இந்த அணை கட்டப்பட்டது

2022 ஏப்ரல் 18] *[திரு. ஓ. பன்னீர்செல்வம்]*

முதல் இன்று வரை எவ்வாறு இருக்கின்றது என்பதையெல்லாம் ஆராய்ந்தது.

அதோடுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியில் பூகம்பமே ஏற்பட்டாலும் இந்த அணைக்குச் சேதம் உண்டாகுமா என்று அறிவியல்பூர்வமாக ஆராய்ந்து பார்த்தார்கள். பூகம்பமே ஏற்பட்டாலும் இந்த அணை எந்தவித சேதத்திற்கும் உள்ளாகாது என்ற அறிக்கையை அதிகாரம் படைத்த குழு உச்ச நீதிமன்றத்தில் தந்தது. அதன் அடிப்படையில், 136-லிருந்து 142 அடியாகவும், பேபி அணையும், சிற்றணையும் பழுது நீக்கம் செய்யப்பட்டதற்குப் பின்பு, 152 அடியாகவும் அதன் முழுக் கொள்ளளவை உயர்த்திக் கொள்ளலாம் என்று 2006-ல் மாண்புமிகு அம்மா அவர்களே பெற்றுத் தந்த தீர்ப்பை, 2014-ல் மீண்டும் உறுதிப்படுத்தி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினைப் பெற்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதுமா?*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *முடித்துக்கொள்கிறேன். நிறைவு வரைக்கும் வந்துவிட்டேன். அதற்குப் பிறகும் கேரள அரசு, உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய காலத்தில் 4 முறை 142 அடியாக நீரைத் தேக்குவதற்கு வழிவகுத்தார்கள். அதற்குப் பின்னால் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சம்பவங்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். கவனத்தை ஈர்த்துவிடுங்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *ஏற்புடையதாக இல்லை. அங்கே பேபி அணையிலும், சிற்றணையிலும் நாம் பராமரிப்புப் பணிகளை, பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும்போது எந்தத் தடையும் கேரள அரசு ஏற்படுத்தக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் தீர்க்கமான தீர்ப்பும் தந்திருக்கிறது. ஒவ்வொரு நிலையிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் பல கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். அந்த இரண்டு அணைகளையும் பலப்படுத்துவதற்கு டெண்டர் எல்லாம் கோரப்பட்டு விட்டது. வல்லக்கடை வழியாக கட்டுமானப் பொருள்களையெல்லாம் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். ஆனால், கேரள அரசு அதற்கான பாதையையும் போடமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். Materials கொண்டு போவதற்குத் தடை விதிக்கிறார்கள். சில செடிகள், அந்த அணையில் உள்ள*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2022 ஏப்ரல் 18

மண்ணில் நீண்ட காலமாக வளர்ந்து வருவதனால், பெரிய மரங்களாக வளர்ந்துவிட்டன. அவற்றை வெட்டுவதற்கு அனுமதி தரவில்லை. சமீபத்தில்கூட வனத் துறை அதிகாரி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீதிக் கதையாவது அவர்கள் சொல்லட்டும், கொஞ்சம் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: வனத் துறை அதிகாரி, மரங்களை வெட்டுவதற்கு அனுமதி கொடுத்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நன்றி சொன்னார்கள். ஆனால், மறுநாளே அந்த அனுமதியை cancel-ம் செய்துவிட்டார்கள். எந்தப் பொருளையும் எடுத்துக்கொண்டுபோய் உள்ளே சேர்க்க முடியவில்லை. தொடர்ந்து இடையூறு செய்துவருகிறார்கள். அவர்களே அணையைப் போய் பார்வையிடுகிறார்கள். அவர்களே நீரைத் திறந்துவிடுகிறார்கள். அவர்களே நீரின் தன்மையை ஆய்ந்து, மூடிவிடுகிறார்கள். இப்படி ஒரு தன்னிச்சையான சூழ்நிலை. அதனுடைய முழு அதிகாரமும் தமிழகத்திற்குத்தான் உண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கேரள அரசுடன் நல்ல நட்பில் இருக்கிறார்கள். தங்களுடைய நல்ல நட்பின் மூலமாக அந்த நட்பைப் பயன்படுத்தி, அணையினுடைய முழு கொள்ளளவான 152 அடிவரை நீரைத் தேக்குவதற்கு, அனைத்து வகைகளிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். விவசாயத்திற்கு 2½ இலட்சம் ஏக்கரைப் பயன்படுத்தக்கூடிய 5 மாவட்ட மக்களுக்கு பருகுவதற்கு நீரைத் தருகின்ற முல்லை-பெரியாறு அணையைக் காப்பாற்ற வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால், பயனாளி என்ற காரணத்தால், நீங்கள் அந்த அணையைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டுவிட்டீர்கள். எனவே, இனிவரும் உறுப்பினர்கள் தயவுசெய்து, சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லை-பெரியாறு அணை என்பது தமிழ்நாட்டின் உரிமை. இது குறிப்பாக, தேனி, மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம்,

2022 ஏப்ரல் 18] *[திரு. ஜி.கே. மணி]*

சிவகங்கை ஆகிய ஐந்து மாவட்ட மக்களின் வாழ்வாதார உரிமைப் பிரச்சினை. இந்த உரிமைப் பிரச்சினையில் கேரள மாநில அரசு, அடிக்கடி தலையிட்டு, நம்முடைய உரிமையைப் பறிக்கின்ற செயலாக நிகழ்வுகள் அமைந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, இது ஆங்கிலேயர் காலத்திலிருந்து வழங்கப்பட்ட உரிமை. இந்திய திருநாட்டில் சகோதர, அண்டை மாநிலங்களாக இருக்கின்ற தமிழ்நாடு–கேரள உறவில் விரிசல் ஏற்படக்கூடிய வகையில், அடிக்கடி இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடப்பது நமக்கு மிகப்பெரிய வேதனை அளிக்கின்றது.

முற்பகல் 11–25

அதுமட்டுமல்ல; மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட அணைகள் பாதுகாப்புச் சட்டத்தின்படியும், உச்ச நீதிமன்றம் மற்றும் மத்திய அரசு அமைத்த குழு ஆகியவற்றினாலும் முல்லை–பெரியாறு அணை வலிமையாக இருக்கிறது என்று சான்று வழங்கப்பட்டிருக்கிறது. அதோடு, பேபி அணை புதுப்பிக்கப்பட வேண்டும். அந்த அணையைப் புதுப்பிப்பதற்கு தமிழ்நாட்டிலிருந்து அதிகாரிகள் சென்றால், கேரள மாநில காவல் துறை அவர்களைத் தடை செய்கிறது. அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அதோடு, அங்கிருக்கின்ற பேபி அணையைப் புதுப்பிப்பதற்கு அங்கிருக்கின்ற 15 மரங்களைத்தான் வெட்ட வேண்டும். அந்த 15 மரங்களை வெட்டுவதற்குக்கூட அனுமதிக்கவில்லை. இப்போது, மீண்டும் நாங்கள் புதியதாக ஓர் அணையைக் கட்டுவோம் என்று கேரள மாநில சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை எதிர்காலத்தில் நமக்கு பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்ற அச்ச உணர்வு நம்மிடம் மேலோங்கியிருக்கிறது.

அதுமட்டுமல்ல; முல்லை–பெரியாறு அணையில் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தியதோடு, 152 அடியாக உயர்த்துவது நம்முடைய உரிமை. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்மோடு இணக்கமாக இருக்கின்ற கேரள மாநில அரசோடு தொடர்புகொள்ள வேண்டும் அல்லது சட்ட ரீதியாக அணுக வேண்டுமென்ற வேண்டுகோளை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் முன்வைக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், அங்கே இருக்கக்கூடியவர்கள், அந்த மாநிலத்தில் இருக்கின்ற முக்கியமானவர்கள் சொல்கின்ற தகவலும்

[திரு. ஜி.கே. மணி] [2022 ஏப்ரல் 18

நமக்கு வருகிறது. "அணையின் நீர்மட்டத்தை 142 அடியிலிருந்து 152 அடியாக உயர்த்தலாம்; அதனால் அவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை; ஆனால், அதன் எல்லையோரப் பகுதிகளில் மிகப் பெரிய பங்களாக்களைக் கட்டியிருக்கிறார்கள்; ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன; அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற அச்ச உணர்வுதானே தவிர, வேறு காரணம் இல்லை" என்ற செய்தியும் வந்துகொண்டிருக்கிறது. புதிய அணையைக் கட்டினாலும்கூட, அதனால், கேரள மாநிலத்திற்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை; பயனும் இல்லை. முல்லைப் பெரியாறு அணை, பக்கத்தில் இருக்கின்ற இடுக்கி அணை ஆகியவற்றில் நீர் தேங்கி, உபரி நீர் மேற்கு நோக்கி ஓடி வீணாகச் சென்று அரபிக் கடலில் கலக்கிறது. கேரள மாநிலத்திற்கு அரிசி, முட்டை, இறைச்சி உள்ளிட்ட உணவுப் பொருட்கள் தமிழ்நாட்டிலிருந்து செல்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு, இந்த இரு மாநில அரசுகளின் நல்லுணர்வைப் பேணுவதற்கும், தமிழ்நாட்டிற்கு இணக்கமான சூழ்நிலையை உருவாக்குவதற்கும் கேரள மாநில அரசு முன்வர வேண்டும். தமிழ்நாடும் அதை விரும்புகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கு அரசு எப்பாடுபட்டாவது, முயற்சிக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கிலாந்தில் பிறந்து, தமிழ்நாட்டில், தென் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்திருக்கின்ற கர்னல் பென்னிகுவிக் அவர்களது திருவுருவச் சிலை, இங்கிலாந்தில் அவர்களது சொந்த ஊரான Camberley என்ற இடத்தில் நிர்மாணம் செய்யப்படும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புச் செய்தி என்பது (மேசையைத் தட்டும் ஒலி) தென் மாவட்ட மக்களின் உள்ளத்தில் தித்திப்பாக இருக்கின்றது. அதற்காக தென் மாவட்டத்து மக்களின் சார்பாக அவர்களுக்கு நான் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாக என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். 1895 ஆம் ஆண்டு முல்லை–

2022 ஏப்ரல் 18] [திரு. நா. இராமகிருஷ்ணன்]

பெரியாறு அணை கட்டப்பட்டு, கவர்னர் பென்லாக் என்பவர் மூலமாகத் திறந்து வைக்கப்பட்டு, கிட்டத்தட்ட 84 ஆண்டுகள் முல்லை-பெரியாறு அணையில் 152 அடி தண்ணீரைத் தேக்கி வைத்து பெறுகின்ற உரிமையை நாம் பெற்றிருந்தோம். எப்பொழுது உரிமையை இழந்தோம் என்கின்ற அந்த விவகாரத்திற்குள் நான் செல்லவில்லை. ஆனால், 27-12-1979-ல்தான் அந்த அணையின் நீர்மட்டம் 152 அடியிலிருந்து 136 அடியாகக் குறைக்கப்பட்டது. ஏன் குறைக்கப்பட்டது? அந்த அணை வலிமையிழந்துவிட்டது என்கின்ற கிளர்ச்சி அங்கே எழுப்பப்பட்டது. அப்பொழுது மத்திய நீர்வள துறை ஆணையத்தின் சார்பில் Thiru. K.C. Thomas அவர்கள் 23-11-1979-ல் அந்த அணையைப் பார்வையிட்டிருக்கிறார்கள். அதன்படி, அணை வலிமையாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் 300 மீட்டர் அருகில் புதிய அணை கட்ட வேண்டுமென்று கேரள அரசு வலியுறுத்தியது. அதன்மீது ஆய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்வில் கண்ட உண்மை என்னவென்றால், நிலத்திற்குக்கீழே மண்ணிற்கு உறுதித் தன்மை கிடையாது. அதனால் வேறொரு அணை கட்ட முடியாதென்று அந்த ஆய்வில் தெளிவாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில் அன்றைக்கு இருந்த இரு அரசுகளால் திருவனந்தபுரத்திலே நடைபெற்ற பேச்சு வார்த்தையில் மராமத்து பணிகளுக்காக ஒரு கூட்டு ஒப்பந்தம் போடப்பட்டது. அதில், 6 பணிகள் தேர்வு செய்யப்படுகின்றன. கேரள அரசின் ஒப்புதல் மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில் அந்தப் பணிகள் நடைபெற வேண்டும். அதில் முதல் பணி, cable anchoring. அணையின் மேற்பகுதியில் 95 இடங்களில் 5 அடி இடைவெளியில் இரும்புக் கம்பியாலான நங்கூரம் கொண்டு கீழ்மட்டம் வரைக்கும் சிமென்ட் கூழோடு இணைத்தல்; இரண்டாவது, கைப்பிடிச் சுவற்றை உயர்த்துதல்; மூன்றாவதாக, வினாடிக்கு 36,000 கன அடி நீர் வெளியே செல்லக்கூடிய வகையில் 3 மதகுகள் புதியதாக கட்டுதல்; நான்காவது, காலத்திற்கேற்ப எந்த நிலச்சரிவு ஏற்பட்டாலும், பூகம்பம் ஏற்பட்டாலும் அதைத் தாங்குகின்ற சக்தி கொண்ட 145 அடி உயரத்தில் முட்டுச் சுவர் கட்டுதல். அதன்படி அணை அங்கே புதுப்பிக்கப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாக அமைச்சருடைய கவனத்தை ஈர்த்து அமருங்கள். (குறுக்கீடு) உங்கள் பகுதி அணைதான். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

[*2022 ஏப்ரல் 18*

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்பதற்குத்தான் வாய்ப்பு கிடைக்கவில்லை. இதற்காவது வாய்ப்புக் கொடுங்கள். அதற்கும் சேர்த்து time கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சரி. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: ஆகவே, சுருக்கமாகச் சொல்லி முடித்து விடுகிறேன். 2006-ல் ஒரு தீர்ப்பு. தீர்ப்பிற்கு மூலம் என்ன? எதற்கும் ஒரு மூலம் வேண்டுமல்லவா? ஒரே வழக்கு. முல்லை-பெரியாறு அணையில் 136 அடி தண்ணீர் தேக்கிக்கொள்ளலாம். அதற்குமேலே உயர்த்தக் கூடாதென்று கேரளா High Court-லே கேரள அரசு வழக்கு கொடுத்தது. 136 அடிக்குமேல் தண்ணீர் தேக்கலாமென்று தமிழ்நாட்டிலே ஒரு வழக்கு நடைபெற்றது. அப்போது நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். என்ன அழகாகக் கொண்டு போனார் தெரியுமா? He scores a diplomatic victory, அழகாகச் செய்தார். மிகவும் அருமையாகச் செய்தார். எப்படியென்றால், ஒரே வழக்கு இரண்டு மாநில உயர் நீதிமன்றங்களில் இருந்தால் தீர்ப்பு வெவ்வேறாக வரும். எப்படி சுமுகமான தீர்வு காண முடியும்? எனவே, இவ்வழக்கை இரத்து செய்ய வேண்டுமென்றும், உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று 14-2-1998-ல் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்கள். அதுதான் மூல காரணம். 1-2-1999-ல் உச்ச நீதிமன்றம் அந்த வழக்கை எடுத்து, அதன் அடிப்படையில் Mittal வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, 27-2-2006-ல் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீர்ப்பு பெறப்பட்டது. மற்றவற்றையெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

அதற்கடுத்து, 2014-க்கு வருகின்றேன். முதலில் இந்த ஆய்வு; இரண்டாவது ஆய்வு demographic ஆய்வு. அணையின் உட்பகுதியில் முழுமையாக scan செய்வது; அதேநேரத்தில், நீர்மூழ்கி வீரர்கள் அணையின் கீழ்ப்பகுதிக்குச் சென்று ஆய்வு செய்வது; ஆளில்லா நீர்மூழ்கி வாகனம்— remote operating underwater vehicle மூலமாக அணையின் உட்பகுதியில் ஆய்வு செய்வது; satellite ஆய்வு; அணையின் பிற்பகுதியில் உள்ள 10 அடி மற்றும் 45 அடியில் அமைக்கப்பட்டுள்ள கசிவுநீர் மாடத்தில் ஒரு நிமிடத்திற்கு எவ்வளவு நீர் வெளியேறுகின்றது என்கிற ஆய்வு; கர்னல் பென்னிகுவிக் அணையைக் கட்ட பயன்படுத்திய சுட்ட

2022 ஏப்ரல் 18] [திரு. நா. இராமகிருஷ்ணன்]

செங்கல், சுர்க்கி, சுண்ணாம்பு ஆகிய பொருட்கள் தரமுள்ளதாக இருக்கின்றனவா என்று மத்திய மண் மற்றும் கட்டுமானப் பொருட்கள் என்ற அமைப்பு நடத்திய ஆய்வு; அதற்கடுத்து அதிர்வலை ஆய்வு, அணையின் முன் பகுதியில் 60 அடி உயரத்தில் ஒரு சுத்தியல் கொண்டு தட்டினால் அது அணையின் பின் பகுதியில் 72 இடங்களில் எந்தளவிற்கு அதிர்வுகள் வருகின்றது என்கின்ற ஆய்வு; இத்தனை ஆய்வுகளுக்கும் பின்பு 2014–ல் நமக்குக் கிடைத்திருக்கின்ற தீர்ப்பும் சாதகமானதுதான்.

முற்பகல் 11–35

ஒரே ஒரு கருத்து; மராமத்துப் பணிகள் நாம் செய்கின்றபொழுது, அங்கே வேட்டு வைத்தால் வெடிச் சத்தம் வரும். தூசி வரும். வன விலங்குகள் அந்த வெடிச் சத்தத்திற்குப் பயந்து வேறு இடத்திற்கு இடப் பெயர்ச்சி செய்யும். எனவே, சுற்றுப்புறச்சூழல் பாதிக்கும், வன விலங்குகள் பாதிக்கப்படும், மராமத்துப் பணிகள் செய்யக்கூடாது என்று சொல்லி 47 முறை கேரள அரசு, மத்திய வனம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் அமைச்சகத்திற்கு கடிதம் எழுதியது. மராமத்துப் பணிக்கே சுற்றுப்புறச்சூழல் பாதிக்கும் என்று கடிதம் எழுதிய கேரள அரசு, புதிய அணை கட்ட வேண்டுமென்று எண்ணினால் அல்லது கட்ட முயற்சித்தால் அது சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்காதா என்ற ஒரு கேள்வியும் எழுகிறது.

நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் டெல்லி சென்று மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்தார். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கே நிமிர்ந்து அமர்ந்த முல்லைப் பெரியாறு அணை என்பது தென் மாவட்ட மக்களின் உரிமை. (மேசையைத் தட்டும் ஒலி) 152 அடி தண்ணீர் தேக்குவதற்கு உரிமை பெற்றவர்கள் நாங்கள்; 1956 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் பூசல் சட்டத்தைப் பயன்படுத்தி நீங்கள் தீர்வு காண வேண்டுமென்று வலியுறுத்தி வந்திருக்கின்றார். தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தி வந்திருக்கின்றார். தீபாவளி கொண்டாட்டம்; ஆனால் தீபாவளி பண்டிகையையும் மறந்து நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் 84 வயதிலும் . . . (குறுக்கீடு) ஒரேயொரு வார்த்தை. நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு 5 நாட்கள் உடம்பு சரியில்லை. இப்பொழுது எவ்வளவு வலிமையாக இருக்கின்றார்; இப்பொழுது எவ்வளவு தெளிவாக இருக்கின்றார்; எவ்வளவு கட்டுமஸ்தாக இருக்கின்றார். அதேபோன்று அந்த அணையும்

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [2022 ஏப்ரல் 18

நல்ல கட்டுமஸ்தாக இருக்கின்றது; நல்ல வலிமையாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இவரும் எல்லா மருந்துகளும் சாப்பிட்டார். அங்கேயும் எல்லா மராமத்துப் பணிகளையும் செய்திருக்கிறார். அங்கே வந்து ஒரு நாள் முழுமையாக ஆய்வு செய்தார். அணை வலிமையாக இருக்கின்றது. நமது உரிமையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும் பெற்றுத் தருவார்கள் என்று கூறி, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள். (குறுக்கீடு) எப்பொழுதும் கவன ஈர்ப்பு அறிவிப்பு யார் முதலில் தருகிறார்கள், யார் கடைசியில் தருகிறார்கள் என்பதை வைத்துதான் நான் பேச அழைப்பேன். அந்த அடிப்படையில் அழைத்துள்ளேன்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றும் சொல்லவில்லை. மறந்துவிட்டீர்களோ என்று கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நாம் முல்லைப் பெரியாறு அணை பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். கடந்த 8 ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தில் ஓர் இடைக்காலத் தீர்ப்பு கொடுத்தார்கள். அந்த இடைக்காலத் தீர்ப்பு குறித்து கேரள மாநிலத்தைச் சார்ந்த திரு. ஜோ. ஜோசப் என்பவர் தமிழகத்தின்மீது ஒரு வழக்கு தொடர்ந்தார். அதிலே மூன்று நீதியரசர்கள் Justice A.M. Khanwilkar, Justice A.S. Oka, Justice C.T. Ravikumar ஆகியோர் கொண்ட அமர்வு ஓர் இடைக்காலத் தீர்ப்பு அளித்தது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில்தான் நாம் இன்று ஒரு கவன ஈர்ப்பு கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே அவர்கள் முல்லைப் பெரியாறு அணை விஷயத்தை மிகவும் வலிமையாக எதிர்கொண்டிருந்தார்கள். அதில் தமிழகத்தின் வழக்கறிஞர்கள் வாதாடி இனிவருங்காலங்களில் இதில் யாரும் தலையிடக்கூடாது, தமிழக நீர்வளத் துறையும், கேரள நீர்வளத் துறையும் ஒவ்வொரு பொறியாளரை நியமித்து நீங்கள் பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்று கேரளா மற்றும் தமிழக தலைமைச் செயலாளர்களுக்கு responsibility fix செய்திருக்கிறார்கள். இதுதான் இதனுடைய சாராம்சம்.

2022 ஏப்ரல் 18] [திரு. கு. செல்வபெருந்தகை]

ஆனால், இதனுடைய பின்னணி என்னவென்று பார்த்தால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 ஆண்டுகள் கடுமையாக உழைத்து இரத்தமும் வியர்வையும் சிந்தி, பல உயிர் பலி கொடுத்து, தமிழர்கள் அந்த அணையை தமிழகத்தின் நீர் ஆதாரத்திற்காகக் கட்டினார்கள். 999 ஆண்டுகள் ஒப்பந்தம் போடப்பட்டது. இன்னும் காலம் இருக்கின்றது. 29-10-1886-ல் இந்த ஒப்பந்தம் போடப்பட்டது. ஆனால், இடையில் 1967 ஆம் ஆண்டு காங்கிரஸ் பேரியக்கம் ஆட்சியில் இருந்தவரை எந்தவித நீர் ஆதாரப் பிரச்சினையும் ஏற்படவில்லை; தமிழகத்தின் வாழ்வாதாரப் பிரச்சினையும் பாதிக்கப்படவில்லை. அதேபோன்று மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1977 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தார்கள். அதுவரையிலும் முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையும் இல்லை; தமிழகத்தில் நீர் ஆதாரப் பிரச்சினையும் இல்லை; வாழ்வாதாரப் பிரச்சினையும் இல்லை. ** உரிமையை விட்டுக்கொடுத்ததாகத் தெரியவில்லை. 152 அடி வரை அணையில் நீரைத் தேக்கலாம் என்ற நம்முடைய உரிமையை 136 அடியாகக் குறைத்தார்கள். அன்றைய பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. ராஜா முகம்மது அவர்களிடம் நண்பர்கள் பேசும்போது அவரே அதில் கையெழுத்திட மறுத்ததாகவும், இப்பொழுது உயிரோடு இருக்கும் முன்னாள் அமைச்சர் ஒரு கூட்டத்திலே சொல்லியிருக்கிறார். திரு. ராஜா முகம்மது தமிழகத்தின் வாழ்வாதாரத்தை விட்டுக் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டார். ஆனால் ** என்ற செய்திகள் இருக்கின்றன. ஆகவே, 1967 ஆம் ஆண்டு வரை முல்லைப் பெரியாறு அணை குறித்து எந்தப் பிரச்சினையும் இல்லை. அதற்குப் பிறகு 1977 ஆம் ஆண்டு வரை எந்தப் பிரச்சினையும் இல்லை. (குறுக்கீடுகள்) நான் பேசுகிறேன் இருங்கள்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடித்து விடட்டும். நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. கு. செல்வபெருந்தகை: நான் சொல்கிறேன், இருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

[*2022 ஏப்ரல் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *அவர் திசைதிருப்பிப் பேசுகிறார். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *அவர் திசைதிருப்புகிறார். 2007–ல் உரிமையை யார் விட்டுக்கொடுத்தது? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பதில் இருந்தால் சொல்லிவிடுங்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் சொன்னதில் தவறு இருந்தால், நீங்கள் சொல்லிவிடுங்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *இல்லை. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். உரிமையை யார் விட்டுக்கொடுத்தது? மத்திய நீர்வளக் குழுமம், அளித்தது.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் அனைவரும் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) முதலில், அவர்களை உட்காரச் சொல்லுங்கள். நீங்கள் பேசக்கூடாது என்று உங்கள் கட்சி உறுப்பினர்கள் நினைக்கிறார்களா? (குறுக்கீடு) அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு)*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மத்திய நீர்வளக் குழுமம்தான் இரண்டு அதிகாரிகளை . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள் திரு. செல்வபெருந்தகை, நான் உங்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடு)*

2022 ஏப்ரல் 18]

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மத்திய நீர்வளக் குழுமம்தான், பராமரிப்புப் பணிகளைச் செய்வதற்காக 136 அடியாகக் குறைக்க வேண்டும் என்று பணித்தது. அதன் அடிப்படையில் அது குறைக்கப்பட்டது. தேவையில்லாமல் இப்போது காங்கிரஸ் கட்சியினர் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, நீங்கள் அடுத்ததைச் சொல்லுங்கள். அதை விட்டுவிடுங்கள். நீங்கள் கவனத்தை ஈர்த்துவிட்டு அமருங்கள். (குறுக்கீடு) நீக்கிவிடுவோம் (குறிக்கீடு) சொல்லியாகிவிட்டது.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)
சொல்லியாகிவிட்டது.

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வரலாற்று உண்மைகளை, சுவடுகளைத்தான் சொல்கிறேன். நான் எதுவும் தவறாக . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, ஒரு வார்த்தையை நீக்க வேண்டும் என்று எத்தனை முறை சொல்ல வேண்டும்? நாங்கள் சொல்லிவிட்டோம். நீங்கள் பேசாமல் அமருங்கள். (குறுக்கீடு) நீங்கள் முதலில் இருக்கைகளில் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் இருக்கைகளில் முதலில் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொல்லுங்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜீவாதார உரிமைகள் காப்பாற்றப்பட்டபோது யார் முதலமைச்சராக இருந்தார்? சட்டரீதியாக தீர்ப்பைப் பெற்றுத் தந்து . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைத் தாண்டி நான் ஒன்று சொல்கிறேன். அவர் சொன்ன வார்த்தையை நீக்க வேண்டும் என்று நீங்கள் கேட்டீர்கள். அது நீக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு, நீங்கள் அதற்கு விளக்கமும் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) இல்லை, விளக்கம் சொல்லிவிட்டீர்களல்லவா? (குறுக்கீடு)*

[*2022 ஏப்ரல் 18*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும் உட்காருங்கள். ** என்று நீங்கள் கூறியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, நீங்கள் உடனே முடியுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதெல்லாம் வரலாற்று உண்மை. ஏடுகளில் இருக்கிறது. நீங்கள் அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் எதையும் தவறாகச் சொல்லவில்லை. இல்லாததைச் சொல்லவில்லை. இருக்கிற உண்மைகளைச் சொல்லியிருக்கிறேன். இன்னமும்கூட ஒரு முன்னாள் அமைச்சர் உயிரோடுதான் இருக்கிறார். நீங்கள், என்ன நடந்தது என்பது பற்றி அவரிடம் வேண்டுமானால், போய் கேட்டுக்கொள்ளச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு என்னென்ன தடைகள் கேரள அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக்கின்றார். அதை நிவர்த்தி செய்வதற்கு என்ன பணிகளை, கடமைகளை ஆற்ற வேண்டும் என்பதைப் பற்றித்தான் அவர் பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ, அதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அதை விடுத்து, தனிப்பட்ட முறையில், அரசியல் காரணங்களுக்காக அவர் விமர்சனம் செய்கின்றபொழுது, நாங்களும் அதுபோல் விமர்சனங்களைச் செய்ய நினைப்போம். ஆனால், சட்டமன்றத்தில் அதற்கு இடம் இல்லை. *(குறுக்கீடு)* சட்டமன்றத்தில் அதற்கு இடம் இல்லை. பொதுக் கூட்டங்களில் அவர் அதை வைத்துக்கொள்ளலாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2022 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, நான் ஒன்றைச் சொல்கிறேன். இது இரண்டு மாநிலங்கள் குறித்த பிரச்சினை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்திருக்கிறார்கள். எல்லோரும் இணைந்து, என்ன செய்ய வேண்டும் என்று, ஆலோசனை இருந்தால் சொல்லுங்கள். பழைய வரலாறு தேவை இல்லை.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், இதிலே மிகுந்த அனுபவம் உள்ளவர். அவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலிருந்து தொடர்ந்து இந்தப் பிரச்சினையை deal செய்து கொண்டிருக்கிறார். கடந்த 8 ஆம் தேதி தீர்ப்பு வந்தது. 9 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேரளாவிற்குச் செல்கிறார். அங்கு அவர்களுடைய மொழியில், மலையாளத்தில் பேசுகிறார். அங்குள்ள மலையாள மக்களெல்லாம் பூரிப்போடு, அவர்களுக்கு ஒரு தலைவர் கிடைத்துவிட்டார் என்று ஆனந்தக் கூத்தாடி, கரகோஷம் எழுப்பியதையெல்லாம் நாம் தொலைக்காட்சியிலே பார்த்தோம். (குறுக்கீடு) எனவே, கண்டிப்பாக இதற்கு ஒரு தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. (குறுக்கீடு) எதையெதையோ சமாளிக்கின்ற நம்முடைய அரசு வெற்றிகரமாகச் செயல்பட்டு (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்கார்ந்துகொண்டு யாரும் பேசக் கூடாது. (குறுக்கீடு)

திரு. கு. செல்வபெருந்தகை: முல்லைப் பெரியாறு விஷயத்திலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன், வழக்கமாக நீங்கள்தான் சுருக்கமாகப் பேசுவீர்கள். அப்படியே பேசுங்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி உட்பட தென் மாவட்ட மக்களுடைய வாழ்வாதாரமாக முல்லைப் பெரியாறு அணை திகழ்கிறது. இன்றைக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பை கேரள இடதுசாரி

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [2022 ஏப்ரல் 18

முன்னணி அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். அதேபோல, தமிழகத்தினுடைய மாநில உரிமைகள், நதிநீர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கேரள அரசோடு, கேரள முதலமைச்சரோடு இணக்கமாக இருக்கிறார். ஆகவே, கேரள அரசோடு இணக்கமாகப் பேசி, ஏற்கெனவே நம்முடைய மாநில நதிநீர் உரிமையைப் பாதுகாக்கும் வகையில், முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கு சட்டரீதியாகவும், நல்லிணக்கதோடும் முயற்சி எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், ஒரு வரியில் சொல்லுங்கள்.

முற்பகல் 11–45

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்ட மக்களின் நீராதாரமாகவும், குடிநீர் ஆதாரமாகவும், விவசாயிகளை வாழ வைக்கின்ற முல்லைப் பெரியாறு அணையில் 152 அடி வரை நீரைத் தேக்கலாம் என்று வல்லுநர் குழு பரிந்துரை செய்திருக்கிறது. ஆதலால், முல்லைப் பெரியாறு அணையில் 152 அடி வரை நீரைத் தேக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்,மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிகாரிகளை, வனத் துறையினரை, காவல் துறையினரை கேரள எல்லையில் தடுத்து தாக்குவதும், அடித்து உதைப்பதும், சித்ரவதை செய்வதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கு ஒரு நல்ல முடிவு எட்டுகின்ற நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும், கேரள முதலமைச்சர் அவர்களையோ, நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களையோ சந்திக்கின்றபோது வலியுறுத்த வேண்டும். கடந்த காலங்களில் பொள்ளாச்சி checkpost எல்லையில் வனத் துறையினர் தாக்கப்பட்டார்கள். அதை விசாரிக்கின்ற. . . (மணியடிக்கப்பெற்றது)

2022 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், உரையை முடித்துவிடுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனத்தை ஈர்த்துவிட்டு அமருங்கள்.

திரு. தி. வேல்முருகன்: இருங்கள், அதைத்தான் சொல்கிறேன். வனத் துறையினர் தாக்கப்பட்டார்கள் என்று அங்கு காவல் துறை செல்கிறது. காவல் துறையினரும் அங்கு தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள். இதுபோன்ற அசம்பாவிதங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதைத் தடுக்க. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) திரு. நாகைமாலி, நீங்கள் ஒரு வார்த்தை பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் இரண்டு பேருமே அறிவிப்பு தரவில்லை. ஒரு வார்த்தை சொல்லிவிட்டு அமருங்கள். (குறுக்கீடு) திரு. நாகைமாலி, அறிவிப்பு தரவில்லை. (குறுக்கீடு) திரு. நாகைமாலி, அறிவிப்பு தரவில்லை. (குறுக்கீடு) நீங்கள் தந்தீர்கள். (குறுக்கீடு)

திரு. வி.பி. நாகைமாலி: அறிவிப்பு தரவில்லையென்றாலும் ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். ஒரு நிமிடம் அனுமதி கொடுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன், ஒரு வார்த்தையில் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) சொல்லி முடியுங்கள் வேல்முருகன். (குறுக்கீடு) உங்கள் பெயரையே பதிவு செய்திருக்கிறேன். வேல்முருகன் என்று கொடுத்திருப்பதிலே இருக்கிறது. (குறுக்கீடு) ஒரு வரியில் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு வரியில் பேசி முடியுங்கள் தம்பி. (குறுக்கீடு) ஒரு வரியில் பேசி முடியுங்கள் தம்பி.

திரு. தி. வேல்முருகன்: தொடர்ச்சியாக அங்கே பொள்ளாச்சி எல்லையில் கேரள காவல் துறையால் நம்முடைய தமிழக காவல் துறை அதிகாரிகள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள், மண்டை உடைக்கப்பட்டிருக்கிறது. அதைக் கண்டித்து மிகப் பெரிய போராட்டங்கள் செய்யச் சென்ற எங்கள்மீதும் தாக்குதல்

[திரு. தி. வேல்முருகன்] [2022 ஏப்ரல் 18

அங்கு நடத்தப்படுகிறது. ஆக, இதற்கெல்லாம் ஒரு சரியான முடிவை எடுக்க வேண்டுமென்கிற கோரிக்கையை ஒட்டுமொத்த தமிழ் மக்களின் சார்பாக வைத்து இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். நீங்கள் அறிவிப்பு தரவில்லை. ஒரு வார்த்தையில் சொல்லி அமருங்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு விஷயத்தில் நான் ஏற்கெனவே இந்த அவையில் பதிவு செய்திருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு துணை நிற்கும் என்பதை மட்டும் இங்கே நான் பதிவு செய்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக நான் சபையில் இல்லை. மிகவும் dull அடிக்கிறது என்று எல்லோரும் சொன்னார்கள். இன்று கலகலவென்று ஆகிவிட்டது அல்லவா! வந்தவுடனே இன்றைக்கு ஒரு கலாட்டா, பரவாயில்லை. அப்படியிருந்தால்தான் சபை.

முல்லைப் பெரியாறு அணையைப் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் வருகிறது என்று சொன்னவுடனே, இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது, அதைப் பற்றிப் பேசுவார்கள் என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் ரெட்டி ஒச்சி, முதலி ஒச்சி என்று சொல்லி, ஆதியிலிருந்து பென்னிகுயிக் காலத்திலிருந்து, அணை கட்டியதிலிருந்து இந்தக் கதையையே சொல்லி முடித்தோம். இப்போது என்ன நிலைமை என்று கேட்டீர்களென்றால், இதையெல்லாம் தாண்டி வந்து இப்போது Dam Safety Act என்று சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டம், இந்தியாவிலிருக்கின்ற அணைகள் அனைத்தும் Dam Safety Act-க்குள் அடங்கும். அதற்கு அணை பாதுகாப்புச் சட்டம் என்று பெயர். அணைகள் அனைத்தும் அதற்குள் அடக்கமாகிறது. அதாவது, “The Act provides for surveillance, inspection, operation and maintenance of the specified dam for

2022 ஏப்ரல் 18] [திரு. துரைமுருகன்]

prevention of dam failure related disasters and to provide for institutional mechanism to ensure their safe functioning and for matters connected therewith or incidental thereto." அதாவது, பெரிய அணைகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதற்காக இயக்கம், பராமரிப்பு, கண்காணிப்பு மற்றும் அணை பாதுகாப்பு சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தனி அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையினால், எல்லா அணைகளும் இதன்கீழ் வந்துவிடும். எது, எது எப்படி இருக்க வேண்டும்? தண்ணீர் எவ்வளவு நிறுத்த வேண்டும்? எவ்வளவு போக வேண்டும் என்று சொல்லக்கூடிய மொத்த அதிகாரமும் இந்த ஆணையத்திற்கு வந்துவிடும்.

முற்பகல் 11–50

உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். மேட்டூர் dam-ல், *120* அடிவரை தண்ணீர் தேக்குவோம். சில நேரங்களில், *120* அடிக்குள் நிறுத்திக்கொள்வோம். அப்படி நிறுத்தக் கூடாது. அதையெல்லாம் கண்காணிப்பதற்காகத்தான் இந்த ஆணையம். இதில், நமக்கு இன்னொரு பிரச்சினையும் இருக்கின்றது. நம்முடைய அணைகள் கேரளாவில் இருக்கின்றன. அங்கு, என்ன நிலைமை என்று கேட்டால், அந்த அணைக்கு நாங்கள் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று அவர்கள் சொல்கின்றார்கள். ஆனால், பராமரிப்பு செய்வது யார் என்று கேட்டால், நீங்கள்தான் பராமரிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நம்முடைய அணைகளைப் பற்றி சொல்வதில் கவலை இல்லை. பரம்பிக்குளம்–ஆழியாறில் உள்ள நான்கு அணைகளும் மற்றும் முல்லைப் பெரியாறு அணையும் அவர்களுடைய மாநிலத்தில் இருக்கின்றன. ஆனால், அவற்றைக் கட்டியது, பராமரிப்பது நாம். ஆகையினால், நடவடிக்கை எடுக்க வேண்டியது நாம். அதில் பங்கம் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், இந்த அணை பாதுகாப்புச் சட்டத்தை மிகவும் ஜாக்கிரதையாக, நாம் படித்துப் பார்க்கின்றோம். அதற்கு ஓர் ஆபத்து வராமல், அவற்றைப் பராமரிக்கின்ற பொறுப்பை நம்முடைய கையிலேயே கொடுத்திருக்கின்றது இந்த அணை பாதுகாப்புச் சட்டம். இதில், எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. இதைத்தான் இப்போது கேட்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், இந்த அணை பாதுகாப்புச் சட்டம் வருவதற்கு இன்னும் ஒரு வருடம் ஆகும். இப்போதுதான்

[திரு. துரைமுருகன்] [2022 ஏப்ரல் 18

குழந்தை பிறந்திருக்கின்றது. ஆக, infrastructure எல்லாம் முடிந்து, முழுமையாக வருவதற்கு ஒரு வருடம் ஆகும். ஆகையினால், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கேட்டீர்களென்றால், ஏற்கெனவே, ஆனந்தன் கமிட்டி அமைத்தபோதே, five Judges கொண்ட Constitution Bench-ஐ அமைத்தபோதே, ஒரு Committee-ஐயும் அவர்கள் அமைத்தார்கள். அதாவது, Supervisory Committee அமைத்தார்கள். அந்த Supervisory Committee-ஐ எதற்காகப் போட்டார்களென்றால், பல முக்கியமான செய்திகள் தெரிவதற்காகப் போட்டார்கள். இப்போது, இதனுடைய power முழுவதையும், அந்த Supervisory Committee-க்கு கொடுக்கப் போகின்றார்கள். ஏற்கெனவே, நம்மிடத்தில் technical பணியில் இருந்தவர்கள் இரண்டு பேர், அதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இப்போது, அந்த Supervisory Committee-க்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் நம்முடைய Chief Secretary, அவர்களுடைய Chief Secretary ஆகியோரெல்லாம் பங்கேற்றிருப்பார்கள். ஆகையினால், Dam Safety Act-னுடைய பணி வருகின்ற வரையில், இந்தக் குழுதான் அதைக் கண்காணிக்கும். இப்போது, நாம் அதற்கு ஒத்துக்கொள்கிறோமா என்பதுதான் ஒரு பெரிய யோசனை. எனவே, அந்தக் குழுவிற்குக் கொடுப்பதற்காக, நாங்கள் அதை ஏற்றுக்கொண்டோம் என்று நீங்களெல்லாம் சொல்வீர்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஏனென்றால், திரு. ஓ.பி.எஸ். அவர்கள் நீண்ட காலமாக அதில் இருந்தவர். ஆகையினால், Dam Safety Act-ஐப் பற்றியும், இப்போது போட்டிருக்கின்ற Supervisory Committee-ஐப் பற்றியும் அவர்களுக்குத் தெரியும். இந்த Supervisory Committee-ஐ போட்டிருப்பதால்தான் நமக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

எனவே, நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். Dam Safety Act வந்ததனால், இனி எல்லா அணைகளும் Dam Safety Act-க்கு கட்டுப்பட்டுத்தான் இருக்க வேண்டும். அதில், மாறுபட்ட கருத்து கிடையாது. நம்மைப்போல் இரண்டாங்கட்டானாக dam-ஐ அங்கே கட்டிவிட்டு, இங்கே இருக்கின்ற நம்முடைய நிலைமை என்னவென்று கேட்டால், நாம் அதை பாதுகாத்துக்கொள்ளலாம். அதை எப்படிச் செய்ய வேண்டும்? எப்போது தண்ணீரை நிறுத்த வேண்டும்? நிறுத்தக் கூடாது என்பதை நாங்கள்தான் சொல்வோம் என்கிறார்கள். அங்குதான் உதைக்கின்றது. ஏனென்றால், முல்லைப் பெரியாறு அணையில் இவ்வளவுதான் தண்ணீரை நிறுத்த வேண்டுமென்று சொன்னால், நமக்கு வேறு வழி கிடையாது. அந்த

2022 ஏப்ரல் 18] *[திரு. துரைமுருகன்]*

ஒரு நிலைமை இருக்கிறது. நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எப்படி வருமென்று நமக்குத் தெரியவில்லை. ஏனென்றால், இந்தச் சட்டம் இன்னும் முழுமையாக வரவில்லை. அதை Chief Secretaries எல்லாம் கலந்துதான் பேசுவார்கள். ஆகையினால், Dam Safety Act-னுடைய power-ஐ முல்லைப் பெரியாறு சம்பந்தமாக அமைக்கப்பட்டுள்ள Supervisory Committee இடம் ஒப்படைப்பதற்கு, தமிழ்நாடு ஒத்துக்கொள்கின்றதா என்பதுதான் பிரச்சினை. இந்தப் பிரச்சினையில், நாம், நம்முடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், இதுசம்பந்தமாக அவர்களுக்கு நாம் letter அனுப்ப வேண்டும். ஆகையினால், இது குறித்துத்தான் நீங்கள் சொல்ல வேண்டும். ஆனால், நிலைமை என்னவென்றால், வேறு வழி கிடையாது. இதை நாங்கள் வழக்கறிஞர்களிடம் சொல்லிப் பார்த்தோம்; பேசிப் பார்த்தோம். அவர்களெல்லாம் நமக்கு இதைத் தவிர வேறு வழியே கிடையாது என்று சொல்கிறார்கள். இன்னும் இரண்டொரு நாட்கள் எடுத்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்களோடு கூடி பேசிவிட்டு, அதற்குப் பிறகு முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுவொரு முக்கியமான பிரச்சினையாகும். மற்றபடி நீங்கள், அந்த dam-ஐக் கட்டினார்கள்; இந்த dam-ஐக் கட்டினார்கள் என்று சொல்வதெல்லாம் பழைய காலத்து கதை. ஆகையினால், உங்கள் அம்மா சொன்னார்களா? எங்கள் அய்யா சொன்னார்களா என்று வேறு ஏதாவது ஆரம்பித்தால், மறுபடியும் பெரிய தகராறாக ஆகிவிடும். அதனால், அது தேவையில்லை. இதுதான் இன்றைக்கு இருக்கிற முக்கியமான பிரச்சினை. அந்தப் பிரச்சினைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி, அவர் என்ன முடிவெடுக்கிறாரோ, அந்த முடிவிற்கு நாம் கட்டுப்படுவோம். இதுதான் நிலைமை. நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–55

(ஆ) கெயில் நிறுவனம் எண்ணெய் மற்றும் எரிவாயுக் குழாய்கள் அமைப்பதிலே ஏற்பட்ட பிரச்சினையால் விவசாயி தற்கொலை-நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கெயில் நிறுவனம் விவசாய நிலங்களில் எரிவாயுக் குழாய்களை அமைப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன், திரு. வி.பி. நாகைமாலி, திரு. மா. சின்னதுரை, திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K. மாரிமுத்து,